

ஐயம் தெளிக

சிவத்தமிழ்ச் செல்வர் 159
முனைவர் நாகப்பன் ஆறுமுகம்

# சாத்தியமா? ஒரு கடவுள் வழிபாடு



கேள்விகளை அனுப்ப வேண்டிய அகப்பக்கம் www.sivaneri.com மின்னஞ்சல் arunagappan@sivaneri.com

***சி. கன்னியப்பன், தெலொக் பங்ளிமா காராங், சிலாங்கூர்***

**ஐயம்: இந்துக்கள் அனைவரும் பல தெய்வ வழிபாட்டை உடையவர்களாக இருந்தனர் என்பதுதான் வரலாறு. இந்து சமயம் பல தெய்வ வழிபாட்டை உடையதாக இருக்கிறது. இந்நிலையில் நீங்கள் முன்மொழியும் ஒரு கடவுள் வழிபாடு சாத்தியமாகுமா?**

தெளிவு: இந்துக்கள் அனைவரும் பல தெய்வ வழிபாட்டை உடையவர்களாக இருந்தனர் என்ற உங்கள் கூற்று ஆய்வுக்குரியது. இந்தியாவில் இருந்த மக்கள் பல்வேறு பண்பாடு, மொழிகளைக் கொண்டவர்கள். இவர்கள் தனித்தனி இனக் குழுக்களாக இருந்தனர். இந்த இனக்குழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான சமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்தன. சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒரு தெய்வம் முன்னிலை பெற்றது. அந்த தெய்வத்தின் பெயரால் அவர்கள் கொண்டிருந்த சமய நம்பிக்கைகள் ஒரு மதமாக அமைந்தது.

கணபதியை வழிபட்டோரின் சமயம் காணாபத்தியம் எனப்பட்டது. சக்தி என்னும் பெண் தெய்வத்தை வழிபட்டோரின் சமயம் சாக்தம் எனப்பட்டது. குமரனை வழிபட்டோரின் சமயம் கௌமாரம் எனப்பட்டது. விஷ்ணுவை வழிபட்டோரின் சமயம் வைஷ்ணவம் எனப்பட்டது சூரியனை வழிபட்டோரின் சமயம் சௌரம் எனப்பட்டது. இவை ஒவ்வொன்றும் தனித்தனி மக்கள் கூட்டத்தினரால் வழிபடப்பட்ட தனித்தனிச் சமயங்கள். சிவனை வழிபட்டோரின் சமயம் சைவம் எனப்பட்டது. சிவன் தனித்த ஒரு நிலப்பிரிவுக்குள் அடங்கி நிற்கவில்லை. சிவ வழிபாட்டினர் இந்தியப் பெருநிலம் முழுவதும் பரவி இருந்தனர். இதுதான் இந்திய சமயங்களின் தொடக்க நிலை வரலாறு.

இதற்கென்ன சான்று? ஒவ்வொன்றும் ஒரு மதம் என்ற பெயரையும் தெய்வத்தையும் கொண்டிருந்தன. வழிபாட்டு முறைகள், சமய விழாக்களைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு தெய்வத்தையும் வழிபட்டோர் தங்கள் தெய்வத்தின் பெருமையை போற்றிச் சொல்ல புராண நூல்களைக் கொண்டிருந்தனர். இவை அனைத்தும் இன்றும் உள்ளன.

இடையில் ஒன்று நடந்தது. தனித்தனி மதங்களோடு தனித்தனி மக்கள் கூட்டமாக வாழ்ந்தவர்கள் வாணிபம், அரசியல் போன்ற காரணங்களால் கலந்து வாழத் தலைப்பட்டனர். இக்காலத்தில் ஒரு மதம், ஒரு தெய்வம் என்று இருந்தவர்கள் பல மதம், பல தெய்வம் என்று பல தெய்வ வழிபாட்டினராக மாறினர். ஒருவரே பல தெய்வ வழிபாட்டினராக மாறியபோது ஒரு தெய்வத்திற்கும் இன்னொரு தெய்வத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்த வேண்டியதாயிற்று. இப்படித்தான் தெய்வங்கள் கணவன், மனைவி, அப்பா, அம்மா, பிள்ளைகள் என்ற உறவுகளைப் பெற்றன.

இப்படி இருப்பதில் என்ன தப்பு? இருக்கட்டுமே என்று சொல்லலாம். தெய்வங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட உறவுகளை நியாயப்படுத்த எழுந்த புராணங்கள் அறிவுத் தளங்களைக் கடந்து முற்றிலும் நம்பிக்கைகளைச் சார்ந்து அமைந்தன. இவை ஆழ்ந்த தத்துவங்களைச் சொல்லும் குறியீட்டுக் கதைகள் என்ற சமாதானம் புராணங்கள் மீது எழுந்த கேள்விகளுக்குச் சொல்லப்பட்ட தற்காலிக அமைதி என்றே சொல்ல வேண்டும்.

மக்கள் பல தெய்வ வழிபாட்டினராக மாறினாலும் தனித் தனிக் குழுவினராகப் பாரம்பரியமாக வழிபட்டு வந்த தங்கள் தெய்வங்களின் மீதான சிறப்பு நம்பிக்கைகள் மாறவில்லை. அதனால் தங்கள் தெய்வமே பிறவற்றைக் காட்டிலும் மேலானது என்று கூறும் புராணங்களையும் தோற்றுவித்தனர்.

இந்தப் புராணங்களால் கடவுளைப் பற்றிய மெய்யறிவுச் சிந்தனை ஒதுக்கப்பட்டது. 'பரம்பொருள் ஒன்றுதான், மற்றவை அந்தப் பரம்பொருளின் பிள்ளைகள் அல்லது அம்சங்கள்' என்ற கருத்தும் மெய்யறிவு நூல்களின் முடிவுகளோடு பொருந்துவதாக இல்லை.

பரம்பொருள் வரம்பற்ற பேராற்றலைக் கொண்டவர். நம்மைப் போன்ற மாயாகாரியமாகிய உடல்களைக் கொண்டவர் அல்ல. என்பதால் அவர் மனைவி மக்களைக் கொண்டவராக இருக்க முடியாது. ஒரு செயலை நினைத்த மாத்திரத்தில் முடிக்க வல்லவர். இவர் ஒரு செயலை முடிக்க இன்னொரு தெய்வத்தை உருவாக்கவோ அந்த தெய்வத்தின் வழி செயல்படவோ வேண்டியதில்லை என்பன போன்ற கருத்துகள் சைவ சமய மெய்யறிவு நூல்களின் முடிவு.

சைவ சமய ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகிய நூல்கள் அனைத்தும் ஒரு கடவுள் கோட்பாட்டை நிலை நிறுத்துவன. இந்த நூல்கள் உணர்த்தும் கடவுள் சிவபெருமான். சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் தலைவன் என்னும் கருத்தில் பதி என்று அழைக்கப்பெற்றான். தன்வயத்தன் முதலிய எண்குணங்களைக் கொண்டவன். வேறு ஒரு பொருளின் சார்பு வேண்டாத இருப்பினை உடைய சுதந்திரன் என்பது சிவபெருமானின் தலைமைக் குணம்.

ஆகமங்கள் சைவ சமயத்தின் அதிகார நூல்கள். இவற்றின் செயல் நூல்கள் திருமுறைகள். இந்நூல்களில் உணர்த்தப்படும் மெய்ப்பொருள் சிந்தனைகளின் திரட்சி மெய்கண்ட சாத்திரங்கள். இவை சைவ சமயத்தின் செல்வங்கள். இவற்றை நமக்கு உணர்த்திய அடியார்களில் தலைமையானவர்கள் சமயக் குரவர் நால்வர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர். சந்தானக் குரவர்கள் நால்வர். மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர்.

சைவம் அல்லாத பிற சமயங்களுக்கு இவ்வாறான மறை நூல்கள் இல்லை. வைணவம் நீங்கலாகச் சிலவற்றுக்கு ஆகமங்கள் இருந்தாலும் அவை நடைமுறையில் இல்லை. அச்சமயங்களைச் சார்ந்தோர் சைவ ஆகமங்களின் அடிப்படையில் கோவில்கள் அமைத்து வழிபாடுகள் ஆற்றி வருகின்றனர். சைவ சமய தத்துவ நெறிகளைத் தம் தெய்வங்களின் மீது ஏற்றிக் கூறுகின்றனர்.

இந்நிலையில் சிவன் அல்லாத பிற தெய்வங்களை வழிபடுவோர் அவற்றையே வழிபடுவது அவரவர் உரிமையாகலாம். ஆனால் சைவர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வோர் சிவன் அல்லாத பிற தெய்வங்களை வழிபடுவது சைவ நெறிக்கு முரண் ஆகிறது. இதற்காகச் சொல்லப்படும் புராண இதிகாச சமாதானங்கள் சைவ மெய்யுணர்வு நூல்களுக்கு இசைவாகாது.

சைவ சமய நூல்களேயன்றி இருக்கு முதலிய வேதங்களும் உபநிடதங்களும் பாகவதம், கீதை போன்ற நூல்களும் சிவபெருமானைப் பரம்பொருள் என்று குறிப்பிடுகின்றன. ஆகவே இந்துக்கள் அனைவரும் சிவபெருமானைப் பரம்பொருளாகவும் ஒரே வழிபடு கடவுளாகவும் கொள்வதற்கு நூலாதரவு உண்டு. கிறிஸ்துவர், இஸ்லாமியர் போல இந்துக்கள் அனைவரும் ஒரு கடவுள் வழிபாட்டுக்கு வருவதென்றால் சைவ சமயத்தில் சிவ வழிபாட்டில் ஒருங்கிணையலாம். என்றாலும் மரபு வழி வழிபாட்டு முறைகள் இதற்கு உடனே வழிவிட மாட்டா என்பதையும் மறுக்க முடியாது.

ஆகவே, சிவனல்லாத பிற தெய்வ வழிபாட்டினர் அவரவர் தெய்வ வழிபாட்டில் நிற்க, சைவர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வோர் சிவ வழிபாட்டில் ஒரு கடவுள் நெறியில் நிற்க வேண்டும் என்பதே சைவ சமய நூல்களின் கட்டளை. இவர்களே உண்மைச் சைவர். இதுவே திருஞானசம்பந்தர் முதலிய நால்வருக்கு நாம் செய்யும் உண்மை வணக்கம்.

சைவம் தமிழர் வளர்த்த பெருநெறி. அறிவார்ந்த சமய நெறி. அறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகளுக்கு அப்பால் மெய்யறிவும் மெய்யுணர்வும் உணர்த்துவது. ஒரு கடவுள் நெறியில் நின்று சிவபெருமானைப் போற்றுவது தமிழரை அறிவார்ந்த சைவர்களாக ஆக்கும்.